# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 271/மா/2023**
**நாள் : 21.11.2023**

திரு. M. கிருஷ்ணபாண்டி,
மதுரை – 16. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
(வருவாய்),
மதுரை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், மேலப்பொன்னகரம் 12வது தெரு, கதவு எண்.10ல் வசிக்கும் திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவரின் 31.08.2023 நாளிட்ட மனு 02.09.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 271/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், மேலப்பொன்னகரம் 12வது தெரு, கதவு எண்.10ல் வசிக்கும் திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவர் தனது 31.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்:-

மதுரை மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில் பிளாக் எண்கள் 4,5,6–களில் 8x8 அளவில் 1090 கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒரு நபருக்கு ஒரு கடை என்பது விதி. ஆனால் விதிகளை மீறி ஒரே நபருக்கு 1090 கடைகளில் பல கடைகள் (K. ரவிசங்கர் கடை எண்கள் 461, 462, 463 530 531 532) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1090 கடைகளில் போலியான அனைத்து காய்கறி வியாபாரிகள் சங்கத்திற்கு 150 கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே 1090 கடைகளில் சட்ட விரோதமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளின் மீது நடவடிக்கை வேண்டி, மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் 06.05.2023 அன்று பதிவு அஞ்சல் மூலம் புகார் மனு செய்தேன். இது சம்மந்தமாக 12.05.2023 அன்று நாளிதழ்களில் செய்திகள் வெளிவந்துள்ளது. ஆனால் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி அகற்றாததால் வியாபாரிகள் பாதிக்கப்பட்டு வாடகை செலுத்த இயலாத கடைகளுக்கு, பொது ஏல அறிவிப்பில் விதிகளை மீறி விதிகளில் இல்லாத, முன் வைப்பு தொகை ரூ.1,00,000/- என அறிவிப்பு வெளியிடப்பட்டதால் ஏலத்தில்

யாரும் கலந்து கொள்ளாமல் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. விதிகளின்படி பொது ஏல அறிவிப்பு வெளியிட எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே மேல் நடவடிக்கை வேண்டி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவராகிய தாங்களிடம் இந்த குற்றச்சாட்டினை எழுத்துபூர்வமாகவும், மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை சாட்சியாகவும் 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் விதி 4ன்படி பதிவு அஞ்சல் மூலம் மேல்முறையீட்டு மனுவாக தாக்கல் செய்கிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 19.9.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் மதுரை மாநகராட்சி உதவி ஆணையரிடம் கோரப்பட்டது. அவர் தனது 10.10.2023 மற்றும் 8.11.2023 நாளிட்ட அறிக்கையில் :**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் உள்ள கடைகளில் பிளாக் எண்.4,5 மற்றும் 6-ல் 8x8 அளவுக்கொண்ட தரைக்கடைகள் உரிய குத்தகை விதிகளின்படி பொது ஏலத்தின் மூலம் உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு நபர், ஒன்றுக்கும் மேற்பட்ட இனங்களில் பொது ஏலத்தில் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக வைப்பு தொகை செலுத்தி கலந்துகொள்ளலாம். மேற்படி பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏல தொகை கோரியதின் அடிப்படையில் திரு. ரவிசங்கர் என்பவருக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கீழமாரட் வீதியில் தனியருக்கு சொந்தமான இடத்தில் செயல்பட்டு வரும் வெங்காய சந்தை பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுவதால் மாநகராட்சிக்கு சொந்தமான மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் ஓராண்டுக்கு மேலாக தற்போது காலியாக இருந்துவரும் பிளாக் எண்.4,5-ல் உள்ள இடத்தில் வெங்காய சந்தை அமைப்பதற்கு நடவடிக்கையில் உள்ளது என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 09.11.2023 அன்று நாகர்கோவில் சர்க்யூட் ஹவுஸில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 09.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில் பிளாக் எண்கள் 4,5,6–களில் 8x8 அளவில் கடைகள் பொது ஏலத்தின் மூலம் சங்க வியாபாரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒரு நபருக்கு ஒரு கடை என்பது விதி. ஆனால் விதிகளை மீறி ஒரே நபர் ரவிசங்கர் என்பவருக்கு பல கடைகள் (461,462,463,530,531,532) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நடவடிக்கை வேண்டி மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கவில்லை. 300 கடைகள் இருந்த இடத்தில் தற்போது 1200க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளது. இதனால் எங்களின் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் காய்கறி மார்க்கெட் எதிரே மாநகராட்சியின் நடைபாதையை தனி நபர்கள் ஆக்கிரமித்து அனுமதியில்லாமல் வியாபாரம் செய்து வருகின்றனர். இதனால், முறைப்படி ஏலத்தில் கலந்துகொண்டு கடைகளை நடத்திவரும் எங்களுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது.

மேலும் மாத வாடகையில் 3 மடங்குத் தொகையை மட்டுமே டெபாஸிட்டாக மாநகராட்சி பெற முடியும். ஆனால் பொது ஏல அறிவிப்பு விதிகளை மீறி, விதிகளில் இல்லாத முன் வைப்பு தொகை ரூ.1,00,000/– என மாநகராட்சியால் அறிவிப்பு வெளியிடப்பட்டதால் ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளாமல் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் அங்குள்ள பெருமளவிலான கடைகள் காலியாக உள்ளது.

எனவே, மேற்கண்ட அனுமதியின்றி நடத்தப்படும் கடைகளை அகற்றவும், வைப்புத் தொகையை குறைக்கவும் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**மதுரை மாநகராட்சியின் உதவி ஆணையர் மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோர் 09.11.2023 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

''மதுரை மாநராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் உள்ள கடைகளில் பிளாக் எண்.4,5 மற்றும் 6–ல் 8x8 அளவு கொண்ட தரைக்கடைகள் உரிய குத்தகை விதிகளின்படி, பொது ஏலத்தின் மூலம் உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அங்குள்ள கடைகளுக்கு அதிகபட்ச ஏலத் தொகை கோருபவர்களுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக வைப்பு தொகை செலுத்தி மேற்கண்ட ஏலத்தில் யார் வேண்டுமானாலும் விதிகளின்படி கலந்து கொள்ளலாம் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் அங்குள்ள காய்கறி சந்தைக்கு வெளியே உள்ள தனி நபர்கள் மாநகராட்சியின் அனுமதியின்றி கடைகளை வைத்து காய்கறி வியாபாரம் செய்து வருகின்றனர். அக்கடைகள் அவ்வப்போது திடீர் சோதனை நடத்தி அகற்றப்படுகின்றன. இனி வரும் காலங்களிலும் அடிக்கடி திடீர் சோதனைகள் நடத்தி அனுமதியற்ற கடைகளின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

**இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.**

மனுதாரர் மதுரை மாட்டுத்தாவணி காய்கறி மார்கெட்டில் விதிகளை மீறி கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ஒரு நபருக்கு ஒரு கடை என்பது விதி ஆகும் ஆனால் இவ்விதியை மீறி ஒரே நபருக்கு (திரு. ரவிசங்கர்) பல கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இது குறித்து மதுரை மாநகராட்சிக்கு புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால், தன் மனு மீது விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மதுரை மாட்டுதாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் உள்ள கடைகளில் பிளாக் எண்.4,5 மற்றும் 6ல் 8x8 அளவு கொண்ட தரைக்கடைகள் உரிய குத்தகை விதிகளின்படி பொது ஏலத்தின் மூலம் உயர்ந்தபட்ச ஏலதாருக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அங்குள்ள கடைகளுக்கு அதிகபட்ச ஏலத்தொகையாகக் கோருபவர்களுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன என்றும், ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக வைப்புத்தொகை செலுத்தி ஏலத்தில் யார் வேண்டுமானாலும் விதிகளின்படி கலந்து கொள்ளலாம் என்றும், மேலும், அங்குள்ள காய்கறி

சந்தைக்கு வெளியே தனிநபர்கள் மாநகராட்சியின் அனுமதியின்றி கடைகளை வைத்து வியாபாரம் செய்வதாகவும், அக்கடைகளை அவ்வப்போது திடீர் சோதனை நடத்தி அகற்றப்படுகின்றன என்றும், எதிர்காலங்களிலும் அடிக்கடி திடீர் சோதனைகள் நடத்தி அனுமதியற்ற கடைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மேலும், கீழமாரட் வீதியில் தனியருக்கு சொந்தமான இடத்தில் செயல்பட்டு வரும் வெங்காய சந்தையால் போக்குவரத்து இடையூறு ஏற்படுவதால் மாநகராட்சிக்கு சொந்தமான மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் ஓராண்டுக்கு மேலாக தற்போது காலியாக இருந்துவரும் பிளாக் எண். 4,5ல் உள்ள இடத்தில் மேற்படி வெங்காயச் சந்தையை மாற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, மதுரை மாநகராட்சி மண்டலம்-2 உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையிலும், உதவி ஆணையர் மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

2014 ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் மற்றும் விதிகளில் இம்முறைமன்றத்திற்கு உரிமையியல் அந்தஸ்து வழங்கப்பட்ட நிலையில், மனுதாரர் திரு. எம். கிருஷ்ணபாண்டி, 9.11.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி வாக்குமூலம் அளித்துவிட்டு, வாக்குமூலத்தில் கையொப்பம் இடமால் சென்றது இம்முறைமன்றத்தை அவமதிக்கும் செயலாக கருதி மனுதாரருக்கு இம்முறைமன்றம் கடுமையான கண்டனத்தை பதிவுசெய்கிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலதாரருக்குத்தான் கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டு இருந்தாலும், மனுதாரர் தெரிவித்துள்ளபடி போலி சங்கங்கள் பெயரில் வியாபாரிகள் அல்லாதவர்கள் பயனடைந்திருக்கூடிய வாய்ப்புள்ளது என்று இம்முறைமன்றம் கருதுகிறது. எனவே பொது ஏலத்தில் உண்மையான வியாபாரிகள்தான் கலந்துக்கொள்கிறார்களா என்பதை உறுதி செய்திடுமாறும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

மேலும், வருங்காலங்களில் பொது ஏலத்தில் எவ்வித முறைகேடும் எற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்கவும், காய்கறி சந்தைக்கு வெளியே மாநகராட்சியின் அனுமதியின்றி கடை நடத்துவோர் மீது எவ்வித பாராபட்சமின்றி உடனுக்குடன் கடுமையான நடவடிக்கை எடுக்கவும், திடீர் சோதனைகள் நடத்திடவும் மேலும், மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்தவாறு தனியர் இடத்தில் செயல்படும் வெங்காயச் சந்தையை மாநகராட்சியின் இடமான மாட்டுத்தாவணி இடத்தில் மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அறிக்கை அனுப்பிவைக்குமாறும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

The Commissioner of Madurai Corporation is directed to evict the encroachments made by unlicensed and unauthorized vendors of vegetables on the Corporation poromboke in the surrounding area of the present vegetable market occupied by successful bidders cum vendors who contribute to the Revenue of the Local Body. The indifference and lethargy of the field officials concerned in the zone upto the Assistant Commissioner are condemned by this Forum. Severe disciplinary action should be taken against the delinquents who have

failed to prevent the outsiders from selling vegetables in the adjoining territory without any right in comparison with the authorized successful bidders-cum-vendors whose sales are affected by this rival trader entity. Moreover, if this trend continues the present licensed traders will not remit the monthly rent due to loss, lack of business and unfair competition by outside elements. This should be treated with the seriousness that is required in the issue. Regular raids should be organized to evict these encroachers on a sustained mode.

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. M. கிருஷ்ணபாண்டி,
த/பெ. முத்துமாயன்,
10, மேலபொன்னகரம், 12வது தெரு,
மதுரை – 625 016.
2. ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை – 625 002.
3. உதவி ஆணையாளர், (ஆணையரின் வழியாக)
(வருவாய்)
மதுரை மாநகராட்சி, மதுரை – 625 002.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

**நகல்**: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மன்றம்
சென்னை-600 032